https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

07th JANUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 61




# மொட்டு எம்பிக்களுக்கு பின்னால் சிஜடி!

கட்சி தாவலுக்கு ரெடியாம்

02

## பெப்ரவரியில் மின் கட்டணம் குறையும்

### மின்சார சபைக்கு ரூ.8000 கோடி இலாபம்

பெப்ரவரி மாதமளவில் மின்கட்டணத்தில் குறைப்பு செய்யப்படும் என்று மின்சக்தி எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

அதிகமாக பெய்த மழை காரணமாக மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. எரிபொருள் மூலமான மின் உற்பத்தி செலவு குறைந்துள்ளது.இந்த நன்மையை மக்களுக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

மேலும் மின் கட்டண அதிகரிப்பு காரணமாக இலங்கை மின்சார சபைக்கு 8000 கோடி ரூபா இலாபமும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்சி தாவல்கள் விரைவில்

எதிர்வரும் சில நாட்களில் கட்சி தாவல்கள் அதிகரிக்கவுள்ளன என்று அரசியல் வட்டார தகவல்கள் கூறுகின்றன.

02


ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன






உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA



அமானா வங்கியில் வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

புதுச்சுடர்
www.puthusudar.lk
2024 JANUARY 07 - SUNDAY

# எடுபடுமா நாமலின் வியூகம்?

தோல்வி பயத்தில்-குழப்பத்தில் உள்ளார் நாமல் ராஜபக்ச.அதற்கு காரணம் ஜனாதிபதியின் பொருளாதார கொள்கை மேலும் மேலும் மக்களை சிக்கலில் தள்ளுவதுதான்.

இதனால் அவர் ரணில் எதிர்ப்பு நிலைப்பாட்டை பின்வற்றி வருவதை அவதானிக்க முடிகிறது.இது மக்களுக்காக அல்ல தனது அரசியல் எதிர்காலத்துக்காக என்பதே உண்மை.

அதனால்தான் மக்கள்மீது மேலும் சுமையை ஏற்றும் வட் வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அத்துமீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை நாமல்.

ஜனாதிபதியாகவிருந்த கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டார். மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விரட்டப்பட்டார்.அவ்வளவுதான்.

அதனால் மக்களின் பிரச்சினைகள் தீரவில்லை.

கோத்தாவின் இடத்துக்கு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தார்.

அப்போதிருந்த பிரச்சினையான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கும் மின் வெட்டுக்கும் தீர்வை வழங்கினார்.

ஆனால்,பொருட்களின் விலைகள் குறையவே இல்லை.இப்போது பார்த்தால் பல பொருட்களின் விலைகள் கோத்தாவின் ஆட்சியில் இருந்ததை விடவும் அதிகமாகவே உள்ளன.

மின் கட்டணம் தாறுமாறாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் 5 லட்சம் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மின் கட்டணம் 3 ஆயிரம் ரூபாவைத் தாண்டினால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது.

மக்கள் துன்பத்துக்கு மேல் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்காக அது விதித்த நிபந்தனைகள் அனைத்தையும் அதிகரிக்கப் போய்த்தான் மக்கள் இவ்வளவு சிக்கலுக்குள் வீழ்ந்துள்ளனர்.

இந்த வருடமாவது மக்களுக்கு விடிவு கிடைக்குமா என்று பார்த்தால் இப்போது இருப்பதைவிட மிக மோசமாகத்தான் அமையப் போகிறது நிலைமை.

இந்த வருடம் ஜனவரியில் இருந்தே மக்களுக்கு கெட்ட காலம் தொடங்கிவிட்டது

ஜனவரியில் இருந்து இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருத்தரும் மேலதிகமாக 30ஆயிரம் ரூபாவை வாரியாகச் செலுத்தவுள்ளனர்.

இதைச் சமாளிப்பதென்றால் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு அது ஏப்ரல் மாதத்தில் இருந்துதான் வழங்கப்படும்.

இது மக்களை ஏமாற்றும் செயல்.

அரச ஊழியர்களோ 20 ஆயிரம் ரூபா அதிகரிப்பை கோருகிறார்கள்.

துறைமுக ஊழியர்கள் அடுத்த 3 வருடங்களுக்கு 36 வீத சம்பள அதிகரிப்பைக் கோருகிறார்கள்.

ஆனால், இவை எவையும் நடக்கப்போவதில்லை என்பதை எல்லோரும் அறிவோம்.அதற்காகப் போராட்டங்கள் நடத்தியும் வேலை இல்லை.

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் உயருகின்றன.முதலாளிமார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேண்டுமென்றே பொருட்களின் விலைகளை உயர்த்துவது ஒரு பக்கம்.

அரசின் இயலாமையால் விலைகள் உயர்வது இன்னொரு பக்கம்.

எல்லாமே இறுதியில் மக்களின் கழுத்தைத்தான் நெருக்குகின்றன. மக்கள் வாழ வேண்டும் என்பதை விட அரசு வாழ வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியாளர்களுக்கு முக்கியமாகத் தெரிகிறது.

அரசின் அணைத்து நடவடிக்கைகளும் அரசைக் காப்பாற்றுவதாகவே உள்ளது. மக்களைக் காப்பாற்றுவதாக இல்லை. மின் கட்டண அதிகரிப்பு என்பது மக்களை எந்தளவு நெருக்குகிறது என்பதை நாம் அறிவோம்.

ஆனால்,அதைப்பற்றியெல்லாம் கணக்கில் எடுக்காது அரசு நட்டமடையாதவாறே நடவடிக்கை எடுத்து வருகிறது.

மக்களுக்கு எதுவித நிவாரணமும் இல்லை. அரசு மட்டும் நஷ்டத்தில் இயங்கக்கூடாது. இதுதான் அரசின் நிலைப்பாடு.

இந்த சிக்கலுக்கு மத்தியில்தான் வட் வரி சுமையும் மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ளது. இந்த நிலை இப்படியே இன்னும் சில காலம் தொடர்ந்தால் இலங்கை சோமாலியாவைவிட மோசமானதாக அமையும்.வறுமை மேலும் அதிகரிக்கும்.

பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். தொழில் வாய்ப்புகள் மேலும் இழக்கப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியத்தின் அடுத்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டே ஆக வேண்டும் என்கிறது அரசு.

முதலாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியம் விதித்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தப் போய்த்தான் இவ்வளவு சிக்கல் மக்களுக்கு. மேலும் நிபந்தனைகளை நிறைவேற்றப் போனால் நிலைமை மேலும் மோசமாகும்.

நாணய நிதியத்தைத் தவிர்த்து வேறு வழிகளில் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க இவர்களுக்குத் தெரியவில்லை.

அப்படி நாணய நிதியத்திடம் சென்று பொருளாதார பிரச்சினை தீர்ந்தால் பரவாயில்லை.மேலும் பிரச்சினையல்லவா கூடுகிறது.

நாணய நிதியத்தால் அரசின் பிரச்சினைதான் தீருகிறது.மக்களின் பிரச்சினை கூடுகிறது.

இது அரசின் தோல்விக்கு நிச்சயம் வழி வகுக்கும் என்பதால்தான் நாமல் ராஜபக்ஸ வட் வரியை எதிர்த்து அது தொடர்பிலான வாக்கடுப்பில் இருந்து தவிர்ந்துகொண்டார்.

தனது அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றுவது என்றால் ஓரளவாவது மக்களின் மக்கள் நிற்க வேண்டும்.அரசை எதிர்க்க வேண்டும்.

அப்படி சென்றால்தான் ஓரளவாவது தோல்வியில் இருந்து தப்ப முடியும் என்று நாமல் கருதுகிறார்.அதனால்,இப்போது ரணில் எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

நாமலின் தந்தை நாமலின் இந்தத் தீர்மானத்துக்கு இடம்கொடுத்துள்ளபோதிலும் அவர் ரணிலோடுதான் நிற்கிறார்.

தன்னைக் காப்பதற்காக நாமல் வகுக்கும் வியூகம் மக்களிடம் எடுபடுமா?

## மொட்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மொட்டு கட்சி எம்பிக்கள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அரசுக்கு தகவல் கசிந்துள்ளதையடுத்து அவர்கள் யாரென்று கண்டுபிடிப்பதற்காக மொட்டு கட்சி எம்பிக்களை சிஐடியினர் பின்தொடரத் தொடங்கியுள்ளனர் என்று அறிய முடிகிறது.

சஜித்துடன் இணையும் நோக்குடன் மிகவும் இரகசியமானமுறையில் பல எம்பிக்கள் அவருடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இவர்கள் மாறக்கூடியவர்கள் என்று நினைத்துகூடப் பார்க்க முடியாதவர்கள் என்றும் அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அந்த எம்பிக்களை அடையாளம் காண்பதற்கே இந்த பின்தொடர்வாம்.

இந்த எம்பிக்கள் சஜித் மற்றும் அவருடன் நெருக்கமான சிலருடன் மட்டுமே பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று புலனாய்வுக்கு பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன.

## கட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

குறிப்பாக,ஐக்கிய மக்கள் சக்தியை நோக்கி சிலர் படையெடுக்க ஆசைப்படுகின்றனர் என்றும் அந்த கட்சியில் உள்ள சில நிபந்தனைகள் காரணமாக கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்றும் தெரிய வருகிறது.

இருந்தாலும் .சில நாட்களில் பலர் இணையவுள்ளனர். அவர்களுள் குருநாகலை சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் ஒருவரும் .திருகோணமலையைச் சேர்ந்த முன்னாள் எம்பி ஒருவரும் சிறிலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த கேகாலை மாவட்ட எம்பி ஒருவரும் அடங்குகிறார்கள் என்று தகவல்கள் கூறுகின்றன.









தொடர் - 03

# சட்டவிரோமான Spas; சீரழியும் யுவதிகள்

இரத்தினபுரி நகரில் சட்டவிரோதமான நிலையங்கள்

இருந்த போதிலும் இரத்தினபுரி நகரில் இயங்கி வரும் எந்தவொரு ஆரோக்கிய நிலையத்திலும் மேற்படி அறிவுறுத்தல்கள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை.இதனால் தினமும் பெருமளவிலானவர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என இரத்தினபுரி முச்சக்கர வண்டிகள் சங்கத் தலைவர் எஸ்.ஜே.குமார தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி குற்றத் தடுப்புப் பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி யு.பி.லக்சமனிடம் இரத்தினபுரி நகரில் அதிகரித்துவரும் சட்டவிரோதமான ஆரோக்கிய நிலையங்களை கட்டுப்படுத்த முடியாதா? எனக் கேட்ட போது

“இரத்தினபுரி நகரில் சட்டவிரோதமாக நடத்தப்பட்டுவரும் பல ஆரோக்கிய நிலையங்கள் உள்ளன.சில நிலையங்கள் விபச்சார விடுதிகளாகவும் மாறியுள்ளன. போதைப் பொருட்களும் பெருமளவில் இங்கு பாவிக்கப்படுகின்றன.

முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றால் மாத்திரமே இவ்வாறான சட்டவிரோதமான நிலையங்களை முற்றுகையிட முடியும். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இப்படியான நிலையமொன்றில் உயர் தரம் படிக்கும் மாணவ மாணவிகள் சிலர் போதைப்பொருட்கள் பாவிப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினைத் தொடர்ந்து பல மாணவர்களை கைது செய்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்தோம்.அதன் உரிமையாளருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்கொன்றையும் பதிவு செய்துள்ளோம்.

பொதுமக்களுக்கான வேண்டுகோள்

இருந்தபோதிலும் அதிகரித்து வருடம் சட்டவிரோமான ஆரோக்கிய நிலையங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிசாரால் மாத்திரம் இப்போராட்டத்தை முன்னெடுக்க முடியாது.

சர்வமதத் தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் புத்திஜீவிகள் சமூக செயற்பாட்டாளர்கள் பெற்றோர்கள் என பலரும் எங்களுடன் ஒன்றினைய வேண்டும்.இவ்வாறு இணைந்து செயற்படுபவதன் மூலம் இப்பிரச்சினையை கட்டுப்படுத்த முடியும்”, என அவர் தெரிவிக்கிறார்.

உரிய பதிவுச் சான்றிதழ்கள் இன்றியும் அரச அறிவுறுத்தல்களை மீறியும் நடத்தப்பட்டு வரும் சட்டவிரோதமான இஸ்பா ஆரோக்கிய நிலையங்களுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதிலும் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வின்மையால்

(அவசர பொலிஸ் பிரிவு), 1912 (சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை- முறைப்பாடுகள் பிரிவு) மற்றும் சுற்றுலா பொலிஸ் பிரிவு உட்பட றறற.ளடவனய. பழஎ.டம என்ற இணைய தளத்திலும் முறையிடுவதற்கான ஒழுங்குகள் காணப்படுகின்றன.

இரத்தினபுரி நகரில் அரச அங்கீகாரம் பெற்ற ஆரோக்கிய நிலையமொன்றை நடத்திவரும் ஆயுர்வேத வைத்தியர் டாக்டர். ஆர்.சிரிசோமவிடம் இது பற்றிக் கேட்டபோது



பெரும்பாலான முறைப்பாடுகள் கிடைக்கத் தவறுவதாக சட்டத்தரணி அஸ்கர் தெரிவிக்கீறார்.

இவ்வாறான முறைப்பாடுகளை 119

“ நான் எட்டு வருடங்களுக்கும் மேலாக இந்நிலையத்தை நடத்தி வருகிறேன். என்னிடம் பணியாற்றும் அனைவரும் மிகுந்த நம்பிக்கையுடன் மரியாதையுடனும் பணியாற்றுகின்றனர்.

எங்களிடம் விளையாட்டுத் துறையில் ஈடுபடுகின்ற பலர் முறையான சிகிச்சைகளை பெற வருகின்றனர்.

தீர்வுகளை நோக்கி

இன்னும் சிலர் மனஅழுத்தப் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள் மற்றும் எலும்பு முறிவுகளுக்கு உள்ளானவர்கள் பலரும் வைத்திய ஆலோசனைகளுடன் எங்களிடம் சிகிச்சை பெற வருகின்றனர். நாம் என்றும் தவறான பாலியல் நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடுவதை அனுமதிப்பதில்லை.இதனை மிகத் தெளிவாக நாம் காட்சிப் படுத்தியும் உள்ளோம்.

பணம் சம்பாதிப்பதை மாத்திரம் இலக்காகக் கொண்டு அரசின் கண்காணிப்புக்கள் இன்றி இந்நிலையங்கள் எல்லா மூலை முடுக்குகளிலும் திறக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இது மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கையாகும்.எமது பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவத்தின் மகிமையும் நற்பெயரும் இதனால் அழிக்கப்படுகிறது”, எனவும் அவர் தெரிவிக்கிறார்.

சட்டத்தரணி அமீர் /ஹுசைனிடம் இப்பிரச்சினை தொடர்பாகக் கேட்ட போது “இலங்கையில் பொருளாதார நெருக்கடியும் வேலையில்லா பிரச்சினையும் இவ்வாறான சட்டவிரோதமான நிலையங்களின் தோற்றங்களுக்குரிய மற்றொரு பிரதான காரணமாகும்.

மரணங்கள் இடம்பெற்றால் மாத்திரமே சட்டவிரோதமான இஸ்பா நிலையங்கள் தொடர்பில் பொலிசார் கவனம் செலுத்துகிறது.இது பொலிசார் தனது பணியை புறக்கணிக்கும் நடவடிக்கையாகும்.

இலங்கை சுற்றுலா அதிகார சபையும் ஆயுர்வேத மருத்துவ சபையும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்”, என அவர் தெரிவிக்கிறார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் இரத்தினபுரி நகரில் அதிகூடிய வருமானம் பெற்றுத் தரும் ஒரு தொழில் துறையாக இத்துறை மாறி வருகிறது.

வீடுகள் மத வழிபாட்டு தளங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகிலும் இந்நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. எல்லா இடங்களிலும் லஞ்சம் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதால் சட்டத்திலிருந்து தவறு செய்கின்றவர்களும் விடுபட முயற்சிக்கின்றனர்.

சர்வமதத் தலைவர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தவறு செய்கின்றவர்களும் அதற்கு உதவியாக இருக்கின்றவர்களும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் இருக்கும் வகையில் இலங்கை சுற்றுலா சட்ட மூலத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படுவதன் மூலம் இப்படியான தவறுகளை கட்டுப்படுத்த முடியும்”, என அவர் தெரிவிக்கிறார்.

-முற்றும்-

# நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்களில் 50 வீதமானவர்களுக்கான வீட்டுரிமைப் பத்திரங்கள்

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களில் 50 வீதமானவர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் வீட்டுரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் 14542 பேர் வசித்து வருகின்றனர். அதன்படி, முதற்கட்டமாக 50 சதவீதம் பேருக்கு வீட்டுரிமைப் பத்திரம் வழங்கப்படும். மற்ற அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள சட்ட மற்றும் பிற சிக்கல்களைத் தீர்க்க சிறிது காலம் எடுக்கும் என்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை கூறுகிறது.

அந்த பிரச்சினைகளை தீர்த்து அடுத்த வருடம் ஏனைய குழுவிற்கு உரிமைப்பத்திரங்களை வழங்குமாறு, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தமக்கு பணிப்புரை



விடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் முக்கிய நிறுவனங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியனவாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடனத்தில் அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கான உரிமைப் பத்திரங்களை வழங்குவது துரிதப்படுத்தப்படும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வருடம் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் பத்தரமுல்லை செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (5) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வருடத்திற்கு 22 அபிவிருத்தி திட்டங்களை வர்த்தமானியில் வெளியிடுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னர் அதில் மொழிப் பிரயோகம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, அடுக்குமாடி குடியிருப்பில் வசித்த முதல் உரிமையாளர்களின் பிள்ளைகளுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, பொரளை, ஓவல் வியூ ரெசிடென்சீஸ் வீடமைப்புத் திட்டத்தின் வீட்டு அலகுகளின் முதல் உரிமையாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு அனுமதி கோரி அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

பொரளை, ஓவல் வியூ ரெசிடென்சீஸ் வீடமைப்புத் திட்டம் என்பது, அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்புத் திட்டமாகும், மேலும் இது நவீன வசதிகளுடன் கூடிய 24 மாடிகளைக் கொண்டுள்ளது. இந்த வீட்டு வளாகத்தில் 608 வீட்டுத் தொகுதிகள் மற்றும் 5 வர்த்தக தொகுதிகள் உள்ளன.

(முனீரா அபூபக்கர்)



# ஆடு உறவு.. குட்டி பகை

வட் வரியை எதிர்த்து அது தொடர்பிலான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை நாமல் என்பது எல்லோரும் அறிந்த கதை.

அந்த வாக்கெடுப்புக்கு முதல் நாள் மஹிந்த ராஜபக்ஸவை போய் சந்தித்தார் நாமல்.வட் வரி தொடர்பில் தனது நிலைப்பாட்டை த் தெரிவித்த நாமல்,அதே நிலைப்பாட்டுக்கு மஹிந்தவையும் இழுக்க முற்பட்டார். மஹிந்தவோ அதற்கு இணங்கவில்லை.

இது எனது அரசியலின் இறுதிக் காலம். எனது அரசியல் ரணிலோடுதான்.நீங்கள் உங்களது அரசியலை செய்யுங்கள்.நான் எனது அரசியலை செய்கிறேன் என்று கூறிவிட்டார் மஹிந்த.

ஆக ரணிலோடு ,ஆடு உறவு .குட்டி பகை.

# குவியும் கடிதங்கள்



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்துவதற்காக எதிர்க்கட்சிகள் பல பிரச்சாரங்களை செய்துகொண்டு போகின்றன.அவற்றுள் ஒன்றுதான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார் என்பது.

இந்தத் தகவலை அடுத்து பல அமைப்புகள் ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதங்களை அனுப்புகின்றனவாம்.

அந்தக் கடிதங்களை உடைத்துப் பார்த்தால் எல்லாம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலை போட்டியிடுமாறு கோரிக்கை விடுக்கும் கடிதங்களாம்.

இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால் அனைத்தும் அமைப்புகளிடம் இருந்து வந்த கடிதங்கள்தானே தவிர மக்களிடம் இருந்து அல்ல.

## துப்பறிவாளன்

# சஜித்திடம் போட்டுக் கொடுத்த அரச எம்பிக்கள்



வட் வரி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டவுடனேயே அதைக் கொண்டாடுவதற்காக அலறி மாளிகையில் விருந்துபசாரம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இரவு 10 மணியளவில் அரச எம்பி ஒருவரிடம் இருந்து சஜித்துக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அழைப்பை எடுத்தவர் இப்படியான பார்ட்டி ஒன்று நடப்பதை போட்டுக் கொடுத்தார்.

இது உண்மைதானா என்று அறிவதற்காக துப்பறியும் பணியை அவரது எம்பிக்கள் சிலரிடம் ஒப்படைத்தார் சஜித் .

ஒப்படைத்துவிட்டு அவரும் தேடிப் பார்க்கத் தொடங்கினார்.அவருக்கு நெருக்கமான சில அரச எம்பிக்களை தொடர்புகொண்டபோது அது உண்மைதான் என்று தெரியவந்தது.

அதேவேளை,இதைத் தேடிய சஜித்தின் ஏனைய எம்பிக்களும் சில தகவல்களை கொண்டு வந்தனர்.அந்த பார்ட்டியில் அத்தனை அரச எம்பிக்களும் கலந்துகொள்கிறார்கள் என்பதும் அவர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள சாப்பாட்டின் பெறுமதி என்ன என்பதும்தான் அந்தத் தகவல்.

மக்களை சிக்கலில் போட்டுவிட்டு அதைக் கொண்டாடுகிறீர்களா? நாளை இதை நாடாளுமன்றில் பேச வேண்டும் என்று முடிவெடுத்தார் சஜித்.

மறுநாள் அவ்வாறே செய்தார்...



# ஜனாதிபதியிடம் கெஞ்சிய அமைச்சர்கள்

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது.கூட்டம் முடிந்ததும் ஜனாதிபதி அவரது அறைக்குள் சென்றுவிட்டார்.

அவருக்கு பின்னால் ஒரு அமைச்சர்,எம்பிக்கள் பட்டாளமே சென்று அவரது அறைக்குள் நுழைந்தது.

“ஆ..என்ன எல்லாரும் ஒண்டா வந்திருக்கிறீங்க..“‘‘ என்று கேட்டார் ஜனாதிபதி அவர்களை பார்த்து.

கதையை முதலில் தொடங்கினார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

“சேர்,,,நீங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டிங்க என்று கத அடிபடுதே.. உண்மையா..? என்று கேட்டார்.

“நான் போட்டியிடுவேன் என்றும் சொல்லல்ல..இல்லண்டும் சொல்லல்ல.. அதுக்கு முதல் பொருளாதாரத்த நிமித்த வேண்டி இருக்கு..“‘‘ என்றார் ஜனாதிபதி.

“சேர் அந்த வேலைய நீங்க செய்ங்க... ஆனா,,நீங்க போட்டியிடனும்.“‘‘ என்றார் வஜிர அபயவர்தன.

“நாங்க ஜனவரில இருந்து கேம்பைன் ஆரம்பிப்போம் ..என்றார் தொழவைத்த எம்பி.

இவ்வாறு அங்கு கூடிய பல எம்பிகளும் அமைச்சர்களும் ஜனாதிபதியிடம் கெஞ்சி கேட்டுக்கொண்டனர்.

ஜனாதிபதியோ ஆம் என்றும் சொல்லவில்லை,இல்லை என்றும் சொல்லவில்லை.

# தம்மிகவின் 200 மில்லியன்



மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் அல்ல தம்மிக்க பெரேராதான் என்று நீண்ட நாட்களாகவே கதை அடிபடுகிறது.

அதை மெய்ப்பிக்கும் வகையில் தமிக்க சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசியுள்ளார்.

அவர் எப்படியாவது வேட்பாளராக வேண்டும் என்பதற்காக மொட்டு கட்சிக்காக உதவிகளை செய்து வருகிறாராம்.

அண்மையில் மொட்டு கட்சியின் சம்மேளன கூட்டம் இடம்பெற்றது அல்லவா.அதற்கும் தம்மிக்கதான் செலவளித்தாராம்.200 மில்லியன் செலவாம்.



# ரணில் போட்டியிடமாட்டார்

வட் வரிமீதான வாக்கடுப்பில் கலந்துகொள்வதில்லை என்று நாமல் முடிவெடுத்ததும் மொட்டு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதை ஆதரிக்கவில்லை. ஆனால்,பின்வரிசை எம்பிக்கள் ஆதரித்தனர்.

பின்வரிசை எம்பிக்கள் நாமலை சந்தித்து நாமலின் தீர்மானத்துக்கான காரணத்தை வினவினர்.

“ ரணில் இப்படியே போய் கடசில அவர் ஜனாதிபதி தேர்தலுல போட்டிடமாட்டார். ஒதுங்கிடுவார்.அப்ப நாம அரசியல் அனாதைகளாவது சுவர்.அதுக்கு பொறவு நாம வேற வேட்பாளர இறக்கினாலும் வெல்ல ஏலா.சஜித் கிட்ட ஆட்சி போயிடும்.ஜேவிபி ரெண்டாவது இடத்துக்கு வரும்.நம்மட கட்சி அதுக்கும் கீழதான்...

அப்டி நடந்தா நம்மட அரசியலும் சரி...என்ட அரசியலும் சரி..“““ என்று கூறினார் நாமல் கவலையோடு....

# Amazon College கல்வி நிறுவனம் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது

Amazon college ஆனது 3ஆம் நிலை தொழிற்கல்வி ஆனைகுழுவினால் பதியப்பட்ட ஒரு நிறுவனமாக காணப்படுகின்றது அதன் பதிவிலக்கமானது P01/0854 ஆகும்.

கொழும்பு 4 இல் அமைந்துள்ள Amazon College உயர்கல்வி நிறுவனம் கடந்த 18 டிசம்பர் 2023 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த பட்டமளிப்பு விழாவில் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 120 Diploma மாணவர்கள் 50 HND மாணவர்கள் 150 பட்டதாரி மாணவர்கள் மற்றும் முதுமாணி மாணவர்கள் விருதுகளை பெற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக மதிப்பிற்குரிய கல்வி ராஜாங்க அமைச்சர் திரு அரவிந்தகுமார் அவர்களும் பிரதி மாலைதீவுகள் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இலங்கை உயரஸ்தானியர்களும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் இருந்தும் சுமார் ஐந்து பேராசிரியர்கள் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வைப்பதற்காக வருகை தந்தனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திரு சானக உதயக்குமார
















அமரசிங்க அவர்களும் விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

கல்லூரியின் 35 விரிவுரையாளர்கள் 20 ஊழியர்களும் இணைந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதுகளும் சிறந்த இணை நிறுவனத்திற்கான விருதுகளும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

ஏங்களுடைய இனை ருளைநசளவைல ஆக இருக்கின்ற அனைத்து University Ak; UCG அங்கிகரிக்கப்பட்ட University சர்வதேச ரீதியிலும் அங்கிகரிக்கப்பட்ட University ஆக காணப்படுகின்றது.

ஆகவே எங்களிடம் கற்று தேர்ச்சி பெற்று சான்றிதள்கள் பெருகின்ற மாணவர்கள் எந்த நாட்டுக்கும் உயர்கல்விக்கவோ தொழிலுக்கவோ விண்னப்பிக்கின்ற வாய்ப்புகளும் சுமார் 250 மாணவர்கள் இது வரையில் UK, Australia, Canada மற்றும் Europe ஆகிய நாடுகளுக்கு சென்று உயர் கல்வியினை பயின்று வருகின்றார்கள்.

உயர் கல்வியினையும் தொழில் வாய்பினையும் பெற்றுள்ளார்கள். மேலதிக விபரங்களுக்கு எங்களுடைய Facebook பக்கதினை நீங்கள் தொடர்பு கொள்வதன் மூலம் இவற்றை நீங்கள் பாத்துக்கொள்ள முடியும்.

அதே போன்று Diploma ல் இருந்து ஆரம்பித்து அந்த மாணவர்களை உனே நிறைவு செய்த பின்னர் தொடரந்து 1 வருடத்திலே Degree யினை நிறைவு செய்யகூடிய ஒரு வாய்ப்பு எமது Campus ல் காணப்படுகின்றது.

ஆகவேீயசவ வுஐஅந மூலமாக பயிளலாம். வேளிநாட்டில் இருக்கின்றவர்கள் Part Time மூலமாக எமது கல்வியினை மேற்கோள்ள முடியும்.

மாணவர்களுக்கு கல்வி வகுப்புகள் மட்டுமிள்ளாது Extra Curricular activities and வாண்மை விருத்தி யும் நடைபெற்று வருகின்றது.Phycological Team, Counseling club, Student Council போன்ற பல்வேறுபட்ட மேலதிக வாண்மை விருத்தி விடையங்களும் எங்களிடம் காணப்படுகின்றது.

எமது விஷேட பாட நெறிகளாக எங்களிடம் விஷேடமாக வடிவகைப்பட்டு தரமான விருவுரையாளர்ள் உளடக்கி விஷேடமான பாட நெறிகளும் கொடுத்து வருகின்றோம். அதாவது phycology, Counseling, Teacher Training Program, Business Management and Marketing, English இந்த துறைகளில் குறுகிய கட்டணத்திலே எமது பாட நெறிகள் வடிவமைக்கபட்டுள்ளது என்பது குறிப்பிட தக்கது.

30 சிரேஷ்ட விருவுரையாளர்ள் கொன்டு எமது இந்த Campus நடைபெற்று வருகின்றது. 5 faculty எங்களிடம் உள்ளது இதனை எங்களுடைய Campus உடைய அனைத்து நடவடிக்கைளையும் நன்றாக வடிவமைத்து அதனை சரியாக அவதானிக்கின்ற வேலையை எங்களுடைய பணிப்பாளர் ஆச.ஐடாயஅ ஆயசயமையச செய்து வருகின்றார் மேலதிக விபரங்களுக்கு எங்களுடைய Website (www.amazoncollege.lk ) நாடவும்.





# சர்வதேச விருதுகளை வென்ற ஒரியண்ட் பைனான்ஸ்



ஒரியன்ட் பைனான்ஸின் மாற்று நிதி வணிகப் பிரிவு (AFBU) சமீபத்தில் “தெற்காசியாவின் வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனம்“ என்ற சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றதன் மூலம் அதன் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லை அடைந்தது.

இந்த குறிப்பிடத்தக்க பாராட்டு தெற்காசியாவின் மதிப்பிற்குரிய இஸ்லாமிய நிதி மன்றத்தால் (IFFSA) வழங்கப்பட்டது. இந்த கௌரவத்துடன் இணைந்து, ஒரியன்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி, திரு கே.எம். எம். ஜபீர் அவர்கள் “தெற்காசியாவின் இந்த ஆண்டின் சிறந்த இஸ்லாமிய நிதி ஆளுமை“ என்று கௌரவிக்கப்பட்டார், இது எம் நிறுவனத்தின் நிலையை மேலும் மேம்படுத்துகிறது.

எங்கள் வாடிக்கையாளர் களுக்கான நெறிமுறை மற்றும் ஷரியா-முறையிலான நிதி நடைமுறைகளின் சேவை மற்றும் அணுகலை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளுக்காக இந்த அங்கீகாரங்களைப் பெறுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த அங்கீகாரம் எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை மேலும் உறுதிப்படுத்துவதோடு, எங்கள் தரநிலைகளை தொடர்ந்து உயர்த்தவும் புதிய சவால்களை எதிர்கொள்ளவும் ஊக்குவிக்கிறது.

வர்த்தக சேனல்களின் மூத்த மேலாளரும், மாற்று நிதி வணிகப் பிரிவின் தலைவருமான திரு. இபாத் சூரி மற்றும் குழுவினரின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன், என்று பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி, திரு கே.எம்.எம். ஜபீர் அவர்கள் தெரிவித்தார்.

# Best Under a Billion விருது



BPPL Holdings PLC, தூரிகை மற்றும் ஃபிலமெண்ட் ஏற்றுமதி உற்பத்தித் துறையில் முன்னணியில் இருக்கும், Forbes Asiaஆல் 2021 ஆம் ஆண்டிற்கான ஆசியாவின் “Best Under a Billion" விருது வழங்கப்பட்டது.

விருது வழங்கும் நிகழ்வு பிலிப்பைன்ஸ ின் மணிலாவில் நவம்பர் 21ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெற்றது.

குழசடிநள ஆசியாவின் "Best Under a Billion" விருது, விதிவிலக்கான நீண்ட கால நிலையான செயல்திறனை பல்வேறு அளவுகோல்களில் வெளிப்படுத்தும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

ஒரு கடுமையான தேர்வு செயல்பாட்டில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 20,000க்கும் மேற்பட்ட பொது வர்த்தக நிறுவனங்களின் வருடாந்திர விற்பனை 10 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாகவும் ஆனால் 1 பில்லியன் டொலருக்கும் குறைவாகவும், இந்த மதிப்புமிக்க விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 200 சிறந்த நிறுவனங்களில் BPPL Holdings ஒன்றாகும்.

தேர்வு செயல்முறையானது, கடன் நிர்வகிப்பு, விற்பனை வளர்ச்சி மற்றும் ஒரு பங்குக்கான வருவாய் வளர்ச்சி போன்ற முக்கியமான காரணிகளை கணக்கில் கொண்டு, ஒரு கூட்டு மதிப்பெண் அடிப்படையில் ஒரு விரிவான மதிப்பீட்டை உள்ளடக்கியது. தீவிரமான நிர்வாகச் சிக்கல்கள், சந்தேகத்திற்குரிய கணக்கியல் நடைமுறைகள், சுற்றுச்சூழல் நலன்கள், நிர்வாகச் சிக்கல்கள் அல்லது சட்டச் சிக்கல்கள் உள்ள நிறுவனங்களைத் தவிர்ப்பதற்கும் தரமான செயல்முறைகள் பயன்படுத்தப்பட்டன.

# சைபர் தாக்குதல்கள்:
## சுமார் 75% சுகாதார நிறுவனங்கள் குறி

இணையப் பாதுகாப்பை ஒரு சேவையாகப் புதுப்பித்து வழங்குவதில் உலகளாவிய முன்னணி நிறுவனமான ளுழிாழள, இன்று தனது துறை ஆய்வு அறிக்கையான “The State of Ransomware in Healthcare 2023” ஐப் பகிர்ந்துள்ளது.

அந்த நிறுவனங்களில், சைபர் குற்றவாளிகள் சுமார் 75% ransomware தாக்குதலின் தரவுகளை encrypt (குறியாக்கம்) செய்திருக்கிறார்கள்.

இது கடந்த மூன்று ஆண்டுகளில் மிக உயர்ந்த குறியாக்க விகிதமாகும் மற்றும் கடந்த ஆண்டு தங்கள் தரவு encrypt செய்யப்பட்டதாக அறிக்கை செய்த 61% சுகாதார நிறுவனங்களில் இருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.

மேலும், 24% சுகாதார அமைப்புகளால்



மட்டுமே ransomware தாக்குதலை சீர்குலைக்க முடிந்தது, தாக்குபவர்கள் தங்கள் தரவை என்க்ரிப்ட் செய்வதற்கு முன் - 2022 இல் 34% ஆக குறைந்தது இது கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தத் துறையால் அறிவிக்கப்பட்ட மிகக் குறைவான இடையூறு விகிதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

”என்னைப் பொறுத்தவரை, encryptக்கு முன் தாக்குதலை வெற்றிகரமாக நிறுத்தும் நிறுவனங்களின் சதவீதம் பாதுகாப்பு முதிர்ச்சியின் வலுவான குறிகாட்டியாகும்.

இருப்பினும், சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை, இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. அது 24% மட்டுமே ஆகும். மேலும், இந்த எண்ணிக்கை குறைந்து வருகிறது, இது cyberattackerகளுக்கு எதிராக இந்தத் துறை தீவிரமாக களமிறங்குகிறது மற்றும் முன்னேற்றத்தில் உள்ள தாக்குதலைக் கண்டறிந்து நிறுத்த முடியவில்லை.

## இலங்கை ஆடை உற்பத்தி துறையில்
# பல்வேறு நிலைகளை மேம்படுத்த
## அரசாங்கக் கொள்கையும் ஆதரவும் அவசியம்



முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இலங்கையின் ஜவுளித் தேவையில் 50% - 60% இறக்குமதி செய்யப்படுவதாக ஜவுளி மற்றும் ஆடைத் துணை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (FAAMA) தலைவர் சஹான் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இறக்குமதியின் மீதான இந்த சார்பு, தொழில்துறையின் முன்னணி நேரத்தை நீடிக்கிறது மற்றும் வேகத்தை மேம்படுத்துவதற்கும் சுறுசுறுப்பான மாதிரிகளைக் கையாளுவதற்குமான திறனைப் பாதிக்கிறது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த இறக்குமதிகளில் 40% பருத்தியைக் கொண்டுள்ளது, 70% செயற்கைப் நூல்களால் ஆனது.

இலங்கையின் ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தியாளர்களின் வழிகாட்டி அமைப்பான FAAMA, கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) துணை அமைப்பாகும். 40க்கும் மேற்பட்ட உறுப்பு நிறுவனங்களைக் கொண்ட இந்தச் சங்கம், ஆடைத் துறையின் விநியோக சங்கிலிக்கான ஒருங்கிணைந்த குரலாக செயல்படுகிறது.

ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தியாளர்கள் வாய்ப்புகளை அடையாளம் காணவும், போக்குவரத்து, கொள்கைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இணைந்து பணியாற்றுவதற்கு FAAMA உதவுகிறது.

உள்நாட்டு தொழிற்சாலைகளுக்குள் விநியோக சங்கிலிகளை உட்புகுத்துவது தயாரிப்பு நேரத்தை குறைக்கவும், ஏற்கனவே செங்குத்துச் சேர்க்கையை (Vertical Integration) கொண்டுள்ள நாடுகளுடன் இலங்கை போட்டியிடவும் உதவும் என்று ராஜபக்ஷ வலியுறுத்தினார். ”சீனா, வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் அனைத்தும் செங்குத்துச் சேர்க்கையைக் கொண்டுள்ளன.

இந்த செங்குத்துச் சேர்க்கையை கொண்டிருப்பது முதலீட்டாளர்கள் உள்ளூர் விநியோக சங்கிலியில் தயாரிப்புகளை இயற்கையாகவே உருவாக்க அனுமதிக்கும், இதன் விளைவாக சரக்குக் கட்டணங்கள் குறையும்” என்று அவர் கூறினார்.



# சியபத பினான்ஸ் பதுளையில்

சியபத பினான்ஸ், அண்மையில் பதுளையில் அதன் கிளையை திறந்து வைத்து தனது வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.


ஊவா மாகாணத்தில் நிறுவனத்தின் அறிமுகம் இதுவாகும். பதுளை கிளை இல.65 லோவர் வீதி பதுளையில் அமைந்துள்ளது.

இந்த புதிய வலையமைப்பானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கும் மற்றும் தனிப்பட்ட தொழில்முனைவோருக்கும், குறிப்பாக விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

நிகழ்வின் பிரதம அதிதிகளாக பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. டபிள்யூ. கந்தேவத்த, பதுளை பொலிஸ் அத்தியட்சகர் திரு. புத்திக குணசேகர மற்றும் பதுளை பிரதேச செயலாளர் திருமதி துஷாரி நாணயக்கார ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.ஆனந்த செனவிரத்ன மற்றும் சிறப்பு அதிதிகள் ஆகியோர் முன்னிலையில் இத்திறப்பு விழா நடைபெற்றது.

# Year on TikTok வெளியீடு




TikTok அதன் ஆண்டறிக்கையான Year on TikTok 2023ஐ வெளியிட்டது. இது அதன் உலகளாவிய சமூகத்தை கொண்டாடும் வருடாந்த ஆண்டு இறுதி அறிக்கையாகும். இது 2023 ஆம் ஆண்டை இலங்கையிலும் உலகின் பிற பகுதிகளிலும் உருவாக்கிய மிகவும் மறக்கமுடியாத சம்பவங்கள், படைப்பாளிகள் மற்றும் தருணங்கள் ஆகியவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

இந்த ஆண்டு முழுவதும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்ட TikTok இன் உலகளாவிய சமூகம், கலாச்சாரம் மற்றும் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தளத்தில் தொடர்ந்து ஒன்றிணைந்தது.

சுவையான சமையல் குறிப்புகள் முதல் வேடிக்கையான குறும்புகள், Throwback tracks மற்றும் வளர்ந்து வரும் சிறு வணிகங்கள் வரை, TikTok சமூகம் 2023 முழுவதும் நம்பகத்தன்மையை உருவாக்கி, இணைத்து, கொண்டாடியது.

இலங்கை முழுவதும், சமூகம் சமையலுக்குரிய சுவையான உணவுகள், அழகுக் குறிப்புகள் மற்றும் நகைச்சுவை ஓவியங்களால் ஈர்க்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகள், பிற உள்ளூர் விருப்பங்களுடன், Wild Cookbookd; சரியான மசாலா சிக்கன் கறி செய்முறை மற்றும் தினசரி வாழ்க்கை தருணங்களை நகைச்சுவை தருணங்களாக மாற்றும் Hesara Yagid; வேடிக்கையான குறும்பு போன்ற வீடியோக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.





# அத்தனகல்ல ரஜ மகா விகாரையை ஒளிரச் செய்த சுதேசி கொஹொம்ப

மூலிகைகள் கொண்ட தனிநபர் பராமரிப்புப் பொருட்கள் உற்பத்தியாளரும், சந்தையில் முன்னணியில் உள்ள சுதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் பி.எல்.சி. ஆனது, அதன் சமூக ஆதரவு முயற்சிகளில் ஒன்றின் மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தனகல்ல ரஜ மகா விகாரையின், “ஆலோக பூஜாவ“ ஒளியூட்டும் நிகழ்வுக்கு அண்மையில் அனுசரணை வழங்கியிருந்தது.

“சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா சத்காராய“ ஆனது, சுதேசி நிறுவனத்தின் தலைவி திருமதி அமாரி விஜேவர்தனவின் எண்ணக்கருவாகும்.

கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள அத்தனகல்ல ரஜ மகா விகாரை, போதிசத்வ ஸ்ரீ சங்கபோதி, ஒரு வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக மாபெரும் யாகத்தை செய்த இடமாக வரலாற்று ரீதியாக அடையாளங் காணப்படுகின்றது.

சுதேசி நிறுவனத்தின் தலைவி திருமதி அமாரி விஜேவர்தன இந்த ஆலோக பூஜை நிகழ்வு குறித்து கருத்து வெளியிடுகையில், “சுதேசி நிறுவனம், பாரம்பரிய விழுமியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களை நிலைநிறுத்தும் ஒரு இலங்கை நிறுவனம் எனும் வகையில், வருடாந்த ஆலோக பூஜை போன்ற விடயங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதை கடமையாக கருதுகிறது.என்றார்.








# Link Natural இற்கு 3 விருதுகள்

Link Natural நிறுவனத்திற்கு 2022/23 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில் Best Exporter Herbal and Ayurveda (மூலிகை மற்றும் ஆயுர்வேத சிறந்த ஏற்றுமதியாளர்) விருது வழங்கப்பட்டுள்ளது.அதில் மொத்தமாக 3 விருதுகளைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் அனைத்து துறைகளிலும் நிறுவனம் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளது. Link Natural ஆனது, ஆயுர்வேத மருந்துகளுக்கு மேலதிகமாக, மூலிகை சுகாதார மற்றும் தனிநபர் பராமரிப்பு தயாரிப்புகளின், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) அடிப்படையிலான முன்னணி உற்பத்தியாளரும் சந்தைப்படுத்துனருமாகும்.

Link Natural Products நிறுவனமானது, 1982ஆம் ஆண்டு ஏற்றுமதி சந்தைக்கான வாசனைத் திரவிய அத்தியாவசிய எண்ணெய்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்ததன் மூலம் செயற்படத் தொடங்கியது.

அது ஆரம்பத்திலிருந்தே இவ்வணிகத்தின் மிக உயர்ந்த முன்னுரிமையாக, தரத்தை பேணி வருகின்றது. அதன் ஆரம்பத்தை தொடர்ந்து, சில வருடங்களுக்குப் பின்னர், ஆயுர்வேத மருந்துகள், மூலிகை சுகாதார மற்றும் தனிநபர் பராமரிப்பு பொருட்கள் தயாரிப்பில் நிறுவனம் களமிறங்கியது.

# ஸ்டார்ட்-அப் நிறைவு




ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சமூக தொழில் முனைவோர் திட்டமான பிளாஸ்டிக்சைக்கிள், அதன் தொடக்க ஸ்டார்ட்-அப்-சைக்கிளை, 28 நவம்பர் 2023 அன்று செயல் விளக்க தினத்துடன் நிறைவு செய்தது.

“ஸ்டார்ட்-அப்-சைக்கிள்“ என்பது பிளாஸ்டிக் சைக்கிளின் சவால் விடுக்கும் தளமாகும். இது குழுமத்தின் செயல்பாடுகளை விரைவுபடுத்தும் ஜோன் கீல்ஸ் எக்ஸ் மற்றும் குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை மற்றும் புத்தாக்கப் பிரிவான ஜோன் கீல்ஸ் ரிசர்ச் ஆகியவற்றுடன் இணைந்து புதுமையான மற்றும் செயல்படுத்தக்கூடிய நீண்ட கால தீர்வுகள் மூலம் பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் கழிவு சவால்களை எதிர்கொள்ள இலங்கை தொழில்முனைவோர் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

செப்டம்பர் 2023 இறுதிக்குள் 100க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், ஓய்வு, நுகர்வோர் உணவுகள் மற்றும் சில்லறை விற்பனையில் உள்ள ஜோன் கீல்ஸ் குழும வணிகங்களின் தீர்வு வழங்குநர்கள் மற்றும் பிரச்சனைகளை அறிக்கை யிடுபவர்களுக்கும் இடையே ஒரு திறந்த நாள் ஏற்பாடு செய்யப்பட்டது.

2023 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட ஆறு வார வேலைத்திட்டமானது, விண்ணப்பதாரர்களுக்கு குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்புகள் , அறிவுசார் சொத்து, நிதி மேலாண்மை மற்றும் சட்டமன்ற செயல்முறைகள் போன்ற அத்தியாவசியத் துறைகளில் ஜோன் கீல்ஸ் குழுமக் குழு உறுப்பினர்களுடன் தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியது.

# ஜப்பானுக்கு தாதியர்களை வழங்க நடவடிக்கை



தாதியர்களுக்கான தொழில்முறை பயிற்சி மற்றும் உயர் நிபுணத்துவ தரநிலைகளை வழங்கும் நோக்கில் கொழும்பு நவலோக மருத்துவமனை, Daiki Lanka (Pvt) Ltd உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், தாதியர்களுக்கான தேவை அதிகமாக உள்ளது. ஜப்பானிய அரசாங்கம் தனது முதியோர் சமூகத்தை பராமரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

Daiki Group ஜப்பானில் தேவைப்படும் மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக முதியோர் பராமரிப்பு இல்ல வசதிகள் மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குகிறது.

தற்போதைய மக்கள்தொகையின்படி, அவர்களுக்கு 2 தொடக்கம் 2.5 மில்லியன் தாதியர்கள் தேவை. கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜப்பானில் பணியாற்றத் தேவையான தொழில்முறை திறன்மிக்க தாதியர்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நவலோக வைத்தியசாலை குழுமத்தின் பணிப்பாளர்/ பொது முகாமையாளர் பேராசிரியர் லால் சந்திரசேன மற்றும் Daiki Lanka (Pvt) Ltd இன் முகாமைத்துவ பணிப்பாளர் யோசுகே நகமுரா ஆகியோரால் கொழும்பு நவலோக வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

# அமானா-சிங்கர் கைகோர்ப்பு



நிலைபேறான எதிர்காலத்துக்கான முக்கியமான படியை முன்னெடுத்து வைக்கும் வகையில், அமானா வங்கி பிஎல்சி மற்றும் சிங்கர் பிஎல்சி ஆகியன கைகோர்த்துள்ளன.

அதனூடாக அனைவருக்கும் சகாயமான விலையில் சூரிய வலுவை பெற்றுக் கொடுத்து, பசுமையான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக, சிங்கர் பிஎல்சியினால் நம்பிக்கை மற்றும் தர உத்தரவாதத்துடன் வழங்கப்படும் சூரிய மின் தொகுதிகளை, சகாயமான விலையில், மக்களுக்கு நட்பான நிதிவசதியினூடாக அமானா வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த வசதிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் சிங்கர் ஸ்ரீ லங்கா குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ஃ முகாமைத்துவ பணிப்பாளர் மஹேஷ் விஜேவர்தன மற்றும் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் ஆகியோர், வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர், நுகர்வோர் நிதியளிப்பு தலைமை அதிகாரி ரியாஸ் நூர், சிங்கர் பிஎல்சி விற்பனை பணிப்பாளர் வஜிர தென்னகோன். தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் கபில பெரேரா, வியாபார அபிவிருத்தி முகாமையாளர் வருண விக்ரமசிங்க, சந்தைப்படுத்தல் முகாமையாளர் பியும் ஜயதிலக மற்றும் உதவி செயற்பாட்டு முகாமையாளர் மனோஜ் ரூபசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் ஒவ்வொரு இல்லத்தின் நம்பிக்கையை வென்ற, சிங்கருடன் இந்தப் பங்காண்மையை வெளியிடுவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

அதனூடாக சகாயமான விலையில் நிலைபேறான வலுத் தீர்வுகளை வாழ்வுக்கு வளமூட்டி வளர்ச்சிக்கு கைகொடுக்கும் எமது நோக்கத்துக்கமைய இயங்கக்கூடியதாக உள்ளது. இந்த செயற்பாட்டில் அங்கம் வகிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வலு நுகர்வு மற்றும் செலவுகளை நிர்வகித்துக்கொள்ளவும் பங்களிப்பு வழங்குகின்றோம். அத்துடன், நிலைபேறான உலகை கட்டியெழுப்பவும் பங்களிப்பை வழங்குகின்றோம்." என்றார்.




## மரக் கன்றுகளை நடும் திட்டம் ஆரம்பம்

மக்கள் வங்கியின் "மஹாஜன மெஹெவர" சமூக நலன்புரித் திட்டத்தின் அங்கமாக ஆரம்பிக்கப்பட்டHusma Bedana Like Ekak முயற்சியின் கீழ், மரக்கன்றுகளை நாட்டும் முயற்சி அனுராதபுரம், கே.பி. ரத்நாயக்க கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் அனுராதபுரம் பிராந்திய முகாமையாளர் திரு. அசித தனவிலவிதான, அனுராதபுரம் கே.பி. ரத்நாயக்க கல்லூரியின் அதிபர் திருமதி. தீபிகா குமாரசிங்க, வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், கலன மித்துரு சங்கத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

ஒரு பொறுப்புள்ள நிதி நிறுவனம் என்ற வகையில், வங்கிச்சேவை மற்றும் நிலைபேண்தகைமையை இணைத்து, இத்திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் முகநூல் பக்கத்தில் கிடைக்கும் ஒவ்வொரு 100 Likeகளுக்கு தலா ஒரு மரக்கன்று என்ற அடிப்படையில் பூமியின் நலனுக்காக நன்கொடையாக வழங்கப்படும்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சுதேசியினால் நாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றமையானது, அனைத்து வழிபாட்டாளர்களின் நலனுக்காக மாத்திரமன்றி நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வூட்டுவதற்குமாகும்." என்றார்.

## Hindenburg சர்ச்சை: உண்மை வென்றது



அதானி குழுமத்தின் தலைவரான தொழிலதிபர் கௌதம் அதானி, தனது குழுமத்தின் மீது அமெரிக்கக் வர்த்தக நிறுவனமொன்று சுமத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பில் உண்மை வென்றுள்ளதாகவும், இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் தனது குழுமம் தொடர்ச்சியாக பங்களிக்கும் என்றும் கூறியுள்ளார். இது தொடர்பில் இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பைத் தொடர்ந்து அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.


அதானி குழுமத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து ளுஐவு அல்லது ஊடீஐ விசாரணைக்கு உத்தரவிட எந்தவிதமான அடிப்படையும் இல்லை என்றும், மூலதனச் சந்தை ஒழுங்குபடுத்துனரான ளுநுடீஐ, மூன்று மாதங்களுக்குள் அதன் விசாரணையை நிறைவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்திருந்தது.

இந்திய பிரதம நீதியரசர் னு.லு. சந்திரசூட் தலைமையிலான மூவரடங்கிய உச்ச நீதிமன்ற மூன்று நீதிபதிகள் குழாம் அமர்விலேயே இவ்வுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நிலுவையில் உள்ள விசாரணையை மூன்று மாதங்களுக்குள் முடிக்குமாறு இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை சபையிடம் (ளுநுடீஐ) நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. இதன் மூலம், யீடநள-வழ-யசைழசவ குழுமத்திற்கு எதிராக ஒரு வருட காலமாக இடம்பெற்ற உனைநடிரசப ஆராய்ச்சியின் கடுமையான அறிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் அதானி குழுமம் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய இலச்சினையை அறிமுகம்








இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் முன்னணி நிறுவனமான யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் தனது புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது.

குறித்த அறிமுக நிகழ்வு கொழும்பில் உள்ள பிரபல தனியார் ஹோட்டலில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் கடந்த 6 வருடங்களாக தனக்கான ஒருவழியில் யாத்திரியர்களின் அமோக ஆதரவுடன் நாடளாவிய ரீதியில் சேவையை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம் என்பதில் பெறுமிதம் கொள்கின்றது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட இலச்சினை, ஒரு விமானத்தின் ஜன்னல் பகுதி இருப்பதுடன், அது ஆங்கில எழுத்து யூ வடிவத்தையும், அந்த ஜன்னலுகுள் இருந்து பார்க்கும் போது விமானத்தின் பின் பகுதி போன்ற வடிவமைப்பு ஆங்கில எழுத்து "டி" வடிவத்தை கொண்டுள்ளது. இலச்சினையின் தோற்றத்தில் பல வர்ணங்கள் அடங்கியுள்ளன.

அந்த நிறங்கள் ஒற்றுமை, அரவணைப்பு, அன்பு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் சர்வதேச தரத்தில் தனது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, தனது சேவையை வழங்கி வருவதுடன், கடந்த பல வருடங்களாக இலங்கை மக்கள் மத்தியில் ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் அபிமான நம்பிக்கையை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிமுக நிகழ்வில், நிறுவனத்தின் ஊடாக சேவையை பெற்றவர்களுக்கான நினைவு சின்னங்கள் வழங்கிவைத்து கௌரவித்தமை நிறுவனத்தின் தரம், தனித்துவம் சிறப்பு மற்றும் புத்தாக்கத்தையும் எடுத்து காட்டுகின்றது.

பொருளாதார சிக்கலின் பின்னர் நாட்டில் உம்ரா கட்டணம் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்திருந்த வேளையில் அனைவருக்கும் உம்ரா எனும் தொனிப்பொருளில் கடந்த ஒக்டோபர் மாதம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனும் சாதாரண கட்டணத்தில் அறிமுகம் செய்து உம்ரா துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தியது.

இலங்கையில் தற்போது உம்ரா சேவை துறையில் விலையை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதுடன், சந்தையில் விலையை நிர்ணயிக்கும் சக்தியாக இந்நிறுவனம் திகழ்கின்றது.

எதிர்காலத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்ற உள்ளவர்களுக்கான பல்வேறு சிறப்பம்சங்களை கொண்ட புதிய ஒரு பேகேஜை அறிமுகம் செய்யவுள்ளது.